மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) ஆம். மலிவு விலை வீட்டு வசதி திட்டத்தின்கீழ் வீட்டு வசதி வாரியம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 4,543 மலிவு விலை வீடுகளை 484.94 லட்சம் ரூபாய் செலவில் கட்ட செயற்குறிப்புகளை தயாரித்துள்ளது. எந்த அளவிற்கு புதிய வீடுகளைக் கட்ட வேண்டுமென்பது கிடைக்கும் நிதியின் நிலைமையினைப் பொறுத்ததாகும். ரூ. 199.19 லட்சம் செலவில், 1,822 மலிவு விலை வீடுகளை கட்டுவதற்கான திட்டங்களை வீட்டு வசதி வாரியம் எடுத்துக்கொண்டு 444 வீடுகளை கட்டி முடித்திருக்கின்றன. 1,060 வீடுகளை கட்டத் தொடங்கி வேலை நடந்து கொண்டிருக்கிறது. எஞ்சியுள்ள 318 வீடுகளை 1975–76 நிதி ஆண்டில் கட்ட எடுக்கப் படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, இந்த மலிவு வீடுகளை எந்தெந்த மாவட்டத்தில் கட்டுவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது, எவ்வாறு கட்டிக் கொண்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இந்த மலிவு வீடுகள் ரூபாய் 13,000-க்கு உள்ளாக இருக்கிற வீடுகள். அவைகளை சில மாவட்டங்களில், தேவைப்படுகிற இடங்களில் கட்டிக் கொண்டு இருக்கிறோம். பல மாவட்டங்களில் அதிகமாக வேலைகள் எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த மலிவு வீடுகளை அதிகமாக விரும்பக்கூடிய சூழ்நிலையில், எல்.ஐ.சி. போதுமான அளவுக்கு நிதி கொடுக்க தயாராக இருக்கின்றபோது, வருகின்ற ஆண்டில் இன்னும் அதிகமாக மலிவு வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதிகமாக வீடுகளை கட்டுவதற்கு வீட்டு வசதி வாரியம் விரும்புகிறது. சிமெண்ட் கிடைப்பதில்லை. எல்.ஐ.சி.-யில் அக்டோபரில் அதற்கான பணத்தை வாங்குகிறார்கள். வாங்குகிற பணத்தை எவ்வளவு வேகமாக செலவழிக்க வேண்டுமோ, அதைச் செய்து கட்டுகிறோம். கட்டடம் கட்டுவதில் சில சங்கடங்கள்

1975 ஏப்ரல் 3]

இருக்கின்றன. சிமெண்ட் பற்றுக்குறை, செங்கல் பற்றுக்குறை இருக்கிறது. அவைகள் இருந்தாலும் இந்த வீடுகளை அதிகமாக கட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: கட்டுகின்ற நேரத்தில் சிறு நகரங்கள், கிராமங்களில் கட்டுவதில்லை. அங்கே கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சிறு நகரங்களுக்கு கூட இதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. தாலுக்கா தலைநகரங்களில் பல இடங்களில் இப்படிப்பட்ட வீடுகள்—நாமக்கல்லில் இப்போது வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. தர்மபுரியில், தஞ்சாவூரில், சில மாவட்டங்களில் நெசவாளர்களுக்கு இப்படிப்பட்ட வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன—கட்டப்படுகின்றன. ஆகவே பல ஊர்களில் இப்படிப்பட்ட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இந்த மலிவு வீடுகள் கட்டுவதில் பின்தங்கியவர்களுக்கு ஏதாவது முன் உரிமை உண்டா? அப்படியானால் எந்தெந்த பின்தங்கிய சமூகத்தினருக்கு இந்த வீடுகள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது? இதற்கான முறை என்ன? எந்த அடிப்படையில் அவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்படுகிறது? எவ்வளவு பணம் கட்ட வேண்டும், அரசாங்கம் எவ்வளவு மானியம், எவ்வளவு கடன் தருகிறது என்ற விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில் வீடு என்பது சொத்து. மானியத்திற்கு இதில் இடம் கிடையாது. 13,000-க்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் 10 சதவிகிதம் முன் பணம் செலுத்தி விட்டால் போதும். 13 ஆயிரம் என்றால் 1,300 முன்பணம் செலுத்த வேண்டும். மற்ற வீடுகளுக்கு 13 ஆயிரத்திற்கு மேல் இருக்கிற வீடுகளுக்கு 12½ சதவிகிதம் சென்டேஜ் சார்ஜ் வீட்டு வசதி வாரியம் வசூலிக்கிறது. இது குறைந்த வருவாய் உள்ளவர்களாக இருந்தால் 6¼ சதவிகிதம் சென்டேஜ் வசூலிக்கிறது. இந்த வீடுகள் குறைந்த வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 4,200 வருமானம் உள்ளவர்களுக்குத்